ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தெருக்கூத்து

**வ.மோகனப்பிரியா**

**உதவிப்பேராசிரியர், கே.பி.ஆர். கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரி,**

**அரசூர், கோயம்புத்தூர்.**

11

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர் வாழ்வியல் மரபுகளுள் கலை என்பது முதன்மைக்கூறாகும். கலையின் நுட்பமான அறிவுப்புலப்பாட்டினைத் தமிழரினம் பெற்றிருந்தது. கலைகள் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும் கலையாக மட்டுமில்லாமல் பண்பாட்டின் சிறப்பினைப் புலப்படுத்தும் திறவுகளாகவும் விளங்குகின்றன. மக்களின் வாழ்க்கையில் இடம்பெறும் கலைகள் அனைத்தும் நாட்டார் வழக்காற்றில் இருந்து தோன்றியவையாகும். அதில் தெருக்கூத்து என்பது பழங்காலந்தொட்டு மக்களின் வாழ்வியலில் இருந்து வருவதைக் காணலாம். மங்கல நிகழ்விற்கும் திருவிழாக்களின் போதும் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்ட இக்கலை வடிவம் பொதுவான அரங்கினை நிகழிடமாகக் கொண்டு நடத்தப்படுவதாக அமைந்திருக்கிறது.

தெருக்கூத்துக்கலை மக்களின் வாழ்க்கையில் பலவகை இதிகாச, புராண நிகழ்வுகளை அறிதற்கும், அதன்வழி நல்லறங்களைப் பேணுவதற்கும் வித்திடுவதாக அமைந்திருக்கிறது. தெருக்கூத்தின் வளர்ச்சிப் படிநிலையே நாடகமாகத் தோன்றியது. நாடக அரங்கில் நடத்தப்பட்ட காட்சிகள் மனதில் நிலைத்த இன்பத்தை வழங்கியதோடு நடைமுறை வாழ்க்கையின் மரபுகளையும் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. நாடகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சி நிலையாக இன்றைய காலத் திரைத்துறையின் வளர்ச்சியைக் குறிப்பிடலாம். பழமரபுகளின் வளர்ச்சியே பிற்காலக் கலைக்கூறுகள் தோன்றுவதற்கு அடித்தளமிடுகிறது.

**திறவுச்சொற்கள்:** கட்டியக்காரன் , ,நாடகம், அரங்கம் , கூத்துக்கலைஞர்கள்

**முன்னுரை**

தமிழ் மொழி இயல், இசை ,நாடகம், என்ற மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. இதில் முதல் இரண்டு வகைமைகளான இயலும் இசையும் கற்றறிந்தோரால் போற்றப்பட்டது மூன்றாவது வகைமையான நாடகமோ கல்லாத பாமர மக்களும் இன்புறும் வண்ணம் அமையப் பெற்றுள்ளது. அனைத்து கலைகளுக்கும் முதன்மையாக விளங்குவது நாடகக் கலையாகும். இந்நாடக கலையானது தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்தது ஆகும் மேலும் நாடக கலையின் தோற்றுவாயான தெருக்கூத்து பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இயல் இசை நாடகம்**

இயல், இசை ,நாடகம் ஆகிய மூன்றும் தமிழ் மொழியின் இணையான கூறுகள் என்பதை முத்தமிழ் என்ற கருத்துக்கோட்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது. அதுமட்டுமின்றி மூன்றுக்கும் தமிழ் மக்கள் தந்த முக்கியத்துவத்தையும் முத்தமிழ் என்னும் இச்சொல் வெளிப்படுத்துவதாய் அமையப்பெற்றுள்ளது. ஆசிரியம் முதலான செய்யுளை இயற்றத் தமிழ் என்றும், பண்ணோடு கூடிய பாடலை இசைத் தமிழ் என்றும், பாடி ஆடுதலை நாடகத் தமிழ் என்றும் குறிப்பர். அஃதோடு இயற்றத் தமிழ் அறிவுக்கு விருந்தாக அமைவது. இன்னிசைத் தமிழ் அறிவுக்கு செவிக்கும் விருந்தாக

அமைவது. நாடகத் தமிழோ அறிவிக்கும் செவிக்கும் விழிக்கும் என்றும் புலனனைத்துக்கும் விருந்தாக அமைவதாகும். இதனைப் பேராசிரியர் அடிகளாசிரியர்,

**“அறிவுக்கும் செவிக்கும் விருந்தாகுமே**
**நடிக்கலுக்கு ஏற்ற வெண்துறைப் பட்டியல்**
**அறம் முதலாகிய பொருள் வகை அமைவரப்**
**பாடி ஆடுதல் நாடகத் தமிழாம்- இத்தமிழ்**
**அறிவிக்கும் செவிக்கும் விழிக்கும் விருந்தாம்”-1**

என்று குறிப்பிட்டுள்ளார் .

**நாடகம்**

முத்தமிழில் நாடகத் தமிழே காலத்தால் முற்பட்டது ஆகும். நாடகம் என்பது ஆரம்ப காலகட்டத்தில் கூத்து என்று வழங்கப்பட்டது. உடல் அசைவு மொழியில் தொடங்கி ஆடல், பாடல், நடிப்பு என்று இன்றைய திரைத்துறை வரை மீள்வதும் கூத்தே ஆகும். ஆதிமனிதன் கூட முதன்முதலில் தனது உடல் அசைவுகளால் நடித்துக் காட்டியே தகவல்களை பரிமாறி உள்ளான். ஆக நடித்தல் என்ற கலையானது ஆதிமனிதன் காலந்தொட்டே இன்றளவும் தொடர்கிறது எனலாம்.

தமிழ் இலக்கியங்களில் பல்வேறு வகையான கூத்துக்கள் இடம்பெறுகின்றன அவற்றுள் நாட்டுப்புறவியல் துறையின் மிக முக்கிய அங்கமாக திகழ்வது தெருக்கூத்து ஆகும். இத்தெருக்கூத்தின் வளர்ச்சி நிலையே நாடகமாகும். பண்டைய காலங்களில் பொழுதுபோக்காக தெருக்கூத்துகள் உருவாக்கப்பட்டன. பின் வேடங்கள் போட்டு நடிக்க ஆரம்பித்தார்கள் அதன்பின் அரசியல் பிரச்சனைகள், திருவிழாக்கள் சோக நிகழ்வுகள் என பல்வேறு கோணங்களை நோக்கி தெருக்கூத்து பயணித்தது.

**தெருக்கூத்து**

பொது அரங்கில் நிகழ்த்தப்படும் கூத்துக் கலையில் முதன்மை பெறுவது தெருக்கூத்து ஆகும். மக்களின் உள்ளடக்கிடக்கைக்கு உணர்வூட்டும் வகையில் கருத்துச் செறிவுடன் வெளிப்படுத்தப்படும் இக்கலை உள்ளத்துணர்ச்சிகளை வெளிக்கொணரும் வகையில் அமைதல் வேண்டும். தெருக்கூத்தில் மக்களின் காட்சிக்கு விருந்தளிக்கும் நோக்கில் கலைஞர்கள் பலவகையான மெய்ப்பாடுகள் தோன்ற நடித்துக் காட்டுவார்கள். உடலியல் கூறுகளான மெய்ப்பாடுகளே தெருக்கூத்துக்கு மிக இன்றியமையாத ஒன்றாகும். இம்மெய்ப்பாடுகள் குறித்த கருத்தியல்களைத் தொல்காப்பியம்,

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்னும்**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”-2**

எனவரும் நூற்பாவின் மூலம் விளக்கியுள்ளது. மெய்ப்பாடுகளைத் தங்கள் உடலசைவுகளால் வெளிப்படுத்தி காண்போரை உணர வைப்பதே நடிப்பாகும். மேடை தந்திரங்களுடன் பாடல் இசை நடனம் மற்றும் நாடகம் ஆகியவற்றின் கலவையாகத் தெருக்கூத்து நாடகங்கள் அமைகின்றன. பெரும்பாலும் இன்பியல் உணர்வுகளுடன் கூடிய மெய்ப்பாடுகளைக் காட்டிலும் துன்பியல் சார்ந்த உணர்வுகளே மக்களின் மனதைப் பெரிதும் தன்வயப்படுத்துகின்றன. துன்பியல் உணர்வுகளை மேடையில் கலைஞர்கள் உணர்வு வெளிப்பாட்டுடன் நடிக்கையில் மக்களும் அவ்வுணர்வுகளைத் தம் உள்ளத்தெழும் உணர்வாகக் கொண்டு வருந்துவதே தெருக்கூத்தின் தனிச்சிறப்பாக அமைகிறது எனலாம்.

**அரங்கம்**

கலைகள் நிகழ்தற்குரிய இடங்களை அரங்கம் என வழங்குவர், இவை மன்றம், அவைமையம், கிடல் என்ற வேறுபெயர்களாலும் சுட்டப்படுகின்றன. நிகழரங்கில் காட்சிப்படுத்தி நடிக்கையில் கலைஞர்கள் தம் வாழ்க்கையின் துயரங்களை மறந்து தாம் ஏற்று நடிக்கும் கதாபாத்திரங்களாக மாறுவது அவர்களின் கலைசார்ந்த மதிப்புணர்வாக இன்றளவும் இருந்து வருவதைக் காணலாம். ஒவ்வொரு முறை நிகழரங்கில் நுழையும் போதும் தெய்வபூசையுடன் தொடங்குவது அரங்கிற்கு அளிக்கும் மதிப்பென்பதை அறிய முடிகிறது.

**"கோவில் மேடை, திறந்த மைதானம் அல்லது வேறு ஏதேனும் வசதியான தளத்தின் முற்றத்தில் நடிப்பு அரங்கம் அமைக்கப்படும்"3**. அரங்கம் அல்லது தெருக்கூத்து நடைபெறும் மேடை கோவிலின் எதிர் புறத்தில் அமையும். அல்லது மேற்கு நோக்கி அமைக்கப்பட்டு இருக்கும். மூன்று புறங்களிலும் பார்வையாளர் அமர்ந்து பார்க்கும் தன்மையுடையதாய் ஒருபுறம் நிகழ்த்துவதற்கான மறைவிடமும் கொண்டதாய் அமைந்திருக்கும். கூத்தாடும் களத்திற்கு முன் விளக்குகள் கட்டி தொங்கவிட ஏற்ற வண்ணம் இரண்டு கம்பங்கள் நடப்பட்டிருக்கும். பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் மேடையின் பின்புறத்தில் அமருகின்றனர் அரங்கத்தின் பின்புறம் ஒப்பனை அறை அமைந்திருக்கும்.

"பாரத கூத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தின் நடுவில் மண்ணை கொட்டி சுற்றிலும் செங்கல் வைத்து மண்ணால் பூசி, ஒன்றரை அடி உயரத்தில் சிறு மேடை ஒன்று அமைக்கப்படுகின்றது. ஊரில் உள்ளோர் மேடையின் பின்புறம் மண்ணை சிறிது சிறிதாக இறங்கு வரிசையில் அமைத்து சுற்றிலும் பனை ஓலைகளால் வேயப்பட்ட சிறு குடில் ஒன்று அமைக்கின்றனர். இது பாரத கூத்து கலைகளின் அணியறையாக பயன்படுகிறது"4

**இறை வணக்கம்**

விநாயகர் வேடம் அணிந்த நடிகரும் ,திரைச்சீலை வைத்திருக்கும் இரண்டு பேரும் மேடையில் தோன்றுவர். இசை கலைஞர்களால் விநாயகருக்கு ஒரு பாடலை பாடி கூத்தினை தொடங்குவர். அதன் பின் பல தெய்வங்களின் பெயர்களைக் கூறி அவர்களையும் போற்றி வணங்குவர். தெருக்கூத்தின் தொடக்க நிகழ்வாகவே இறைவணக்கம் அமையப்பெறுகிறது.

**கட்டியக்காரன்**

தெருக்கூத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பவர் கட்டியங்காரர் ஆவார். கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தி நிகழ்த்த வேண்டிய கதையை சொல்லுவார். இவர் நடக்கும் நிகழ்வுகளுக்கு சூழலை வழங்கியும் காட்சிகளுக்கு இடையில் கேலி செய்தும் காட்சிகளை இணைப்பார். "அரண்ட பார்வையும், மிரண்ட விழியும் உடைய இக்கட்டியங்காரர் கோணப் புளியங்காயை கொத்தோட வெட்டுகின்ற, கரடி மயிரை கண்டு இடறி விழுகின்ற பராக்கிரமம் மட்டுமல்லாது அதிரசம் ருசி என்றும் நெல்லில் அரிசி என்றும் அறிந்து சொல்லுகிற புத்திசாலித்தனம் உடையவனாகவும் தன்னை கூறி"5 வருவதானது பார்வையாளர்களுக்கு நகையை உண்டாக்கக் கூடியதாகவும் , கதை கேட்கும் ரசனை மனப்பாங்கிற்கு விட்டுச் செல்லக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

**கூத்துக்கலைஞர்கள்**

கூத்துக் கலைஞர்கள் வண்ணமயமான ஆடைகளை அணிகின்றனர். தங்களது கதாபாத்திரங்களுக்கு ஏற்றவாறு ஒப்பனையிடுகின்றனர். கூத்துக் கலைஞர்களின் ஒப்பனைக்காக

''தர்மகர்த்தா வீட்டிலிருந்து குத்துவிளக்கு, வெற்றிலை பாக்கு ,கற்பூரம் தேங்காய், பூச்சரம், தர்ச்சனை, தேங்காய் எண்ணெய், தண்ணீர் ஒரு குடம், சந்தனக்கல்''6 ஆகியவை ஒப்பனையறைக்கு கொண்டுவரப்படும். மேலும் தங்களது கதாபாத்திரங்களுக்கு ஏற்ற வசனங்களை அவர்கள் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு நடிக்கின்றனர். பெரும்பாலும் கூத்துக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை நோக்கும் பொழுது வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

பார்வையாளர்கள் கூத்துக் கலைஞர்களுக்கு நன்கொடை வழங்கும் வழக்கமும் காணப்படுகிறது. அந்த நன்கொடை தொகையை வைத்து தங்களுடைய வாழ்வை நடத்துபவர்களாக காணப்படுகின்றனர். கூத்துக் கலைஞர்களின் எண்ணிக்கை குழுவுக்கு குழு மாறுபடுகிறது. பொதுவாக 18 பேர் அடங்கிய குழு அதிக அளவில் காணப்படுகிறது. தங்களின் தெருக்கூத்து கதை பொருண்மையாக மகாபாரதம், ராமாயணம், திரௌபதி அம்மன் வரலாறு, அரிச்சந்திர புராணம் போன்றவற்றை அதிகளவில் நடிக்கின்றனர்.

**கால அளவு**

தொடக்க காலத்தில் கூத்து முடிய மாத கணக்கில் நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப கூத்து கதை வளர்க்கப்படும் மக்கள் முடிக்க சொன்னால் மட்டுமே கூத்து முடிக்கப்பெறும். இறப்பு சடங்குகளில் இரவு முழுக்க தெருக்கூத்து நடைபெறும்.

**முடிவுரை**

தெருக்கூத்து என்பது ஒரு வகையான பொழுதுபோக்குச்சடங்கு மற்றும் சமூகநிலையை கூறும் ஊடகமாக திகழ்ந்துள்ளது. பெரும்பாலும் காப்பிய, இதிகாச புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டிருந்தது தெருக்கூத்து. தமிழகத்தின் தொன்மையான கலையாகும் விளங்கியுள்ளது. தெருக்கூத்தின் நீண்டகால அளவும் மக்களிடம் அடிக்கடி அறிமுகமான தெருக்கூத்து கதைகளில் ஏற்பட்ட சலிப்பும் புதிய கலை வடிவங்களின் வருகையும் தெருக்கூத்து கலையின் அழிவுக்கு வித்திட்டது. தமிழ் திரைப்படத்தின் தாக்கமும் தெருக்கூத்தினை பாதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழுக்கான நல்லதொரு நாடக வடிவத்தினை ஏற்படுத்தியதில் தெருக்கூத்து முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது.

**துணை நூல் பட்டியல்**


1. தினமணி நாளிதழ் செய்தி-20/11/2023 திங்கட்கிழமை
2. தொல்காப்பியம் பொருளதிகாரம்(நூற்பா-247) - இளம்பூரனார் உரை திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், லிமிடெட், சென்னை -1.
3. தெருக்கூத்து கலைஞர் ,மா சிவமணி - பெல்லம்பட்டி கிராமம்- திருப்பூர் மாவட்டம்(17/11/2023)
4. முனைவர் மு. ராமசாமி பேராசிரியர் நாடகத்துறை - **தெருக்கூத்து நடிப்பு –** தமிழ் பல்கலைக்கழக வெளியீடு ப.எண் -68
5. முனைவர் மு. ராமசாமி பேராசிரியர் நாடகத்துறை - **தெருக்கூத்து நடிப்பு –** தமிழ் பல்கலைக்கழக வெளியீடு ப.எண் -79